
2

தத்துவ மாலை



தாயுமான சுவாமிகள்.

வெளியீடு :-

தாயுமானவர் வகுப்பு அன்பர்கள்

தியாசாபிகல் சொசைட்டி,

சேலம்-1.

நேரிசை வெண்பா.

நடையும் நனி தளர்ந்து நாவும் குழறி
இடைக்கிடையே பேச்சும் இறைக்க - குடையூன்றி
நாட்டோர் நகைக்க நடக்கும் நடைவேண்டேன்
விட்டை நீ தா தா விரைந்து.

நடையும் நனி தளர்ந்து நாவும் குழறி
இடைக்கிடையே பேச்சும் இறைக்க - குடை ஊன்றி
நாட்டோர் நகைக்க நடக்கும் நடைவேண்டேன்
விட்டை நீ தா தா விரைந்து.

இவனை வென்ற 60 அகவிகைப்
புரிந்த ~~அகவிகைகளை~~ குருவிகள் எனப்படும்

அக 96 தத்துவங்களையும் புரிந்து
தன் மெய்யுணர்வு [illegible] வீடு அடைய
வேண்டும்

ஆகாயத்தின் கூறு 5

காமம், க்ரோதம், உலோபம், மதம், மாச்சர்யம்
இவை 5ம் ஆகாயத்தின் கூறுகளாம்.

தச வாயுக்கள் — 10

வியானன், பிராணன், அபானன், சமானன்
உதானன், நாகன், கூர்மன், கிரிகரன்
தேவதத்தன், தனஞ்செயன் இவை
பத்தும் தச வாயுக்களாம்

தச நாடிகள் — 10.

இடைகலை பிங்கலை சுழுமுனை காந்தாரி
அத்தி, சிகுவை அலம்புடை புருடன்

தத்துவ மாலை

குரு சங்கினி இவை 10ம் தசநாடிகளாம்

வசனாதிகள் — 5

வசனம், தானம், கமனம், விசர்க்கம்,
ஆனந்தம் இவை 5ம் வசனாதிகள்

வாக்குகள் — 4.

சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி
இவை 4ம் வாக்குகள்

முக்குணங்கள் 3

சத்துவ இராசத தாமத இவை 3ம்
முக்குணங்கள்

அகங்காரங்கள் 3

தைசத அகங்காரம், வைகரி அகங்காரம்
பூதாதி அகங்காரம் இவை 3ம் அகங்காரங்கள்

பூதங்கள் 5 — 1) மண் 2) நீர், 3) தீ
4) வளி 5) வான்

ஞானேந்திரியங்கள் 5 —
செவி, கண், நா, மூக்கு, மெய்

தன்மாத்திரைகள் 5
சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம்

கர்மேந்திரியங்கள் 5
வாய், கை, கால், மலவாய், கருவாய்

அந்தக்கரணங்கள் 4
மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

இவை 24ம் ஆன்மதத்துவம் அல்லது
அசுத்ததத்துவம், அல்லது போக்கியகாண்டம்
எனப்படும்

வித்யா தத்துவம் 7
காலம், நியதி, கலை, வித்தை, இராகம்
புருடன், மாயை
இவை 7ம் சுத்தாசுத்த
தத்துவம் எனவும், போக சயித்ரு
காண்டம் எனவும் பெயர்

சிவதத்துவம் 5
சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம்
சத்தி சிவம்
இவை சுத்த தத்துவம் எனப்படும்
பிரேரககாண்டம் எனவும் பெயருண்டு
பூதங்கள் முதல் இதுவரை சொல்லப்பட்ட 36
தத்துவங்கள் அகநிலைக் கருவிகள் எனப்படும்

பிருதுவியின் கூறு 5
மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை
இவை 5ம் பிருதுவின் கூறுகளாம்

சிவமயம்.

தத்துவ மாலை.

அப்புவின் கூறு 5
உமிழ்நீர், சிறுநீர், சுக்கிலம், மூளை
கொழுப்பு இவை 5ம் நீரின் கூறுகளா
ஊதிக் - இரத்தம்

இந்நூல்

சேலம் கொண்டல் மாநகர்
புலவர். திருக்குறள். சி. இராமசாமி அவர்களால்
இயற்றப்பட்டது.

உரையாசிரியர்
பண்டித. திரு. S. சோமநாதச்செட்டியார் அவர்கள்
சேலம் நகரவை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்

தேயுவின் கூறு 5
ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம்
சோம்பல் இவை 5ம் அக்கினியின்
கூறுகளாம்.

வெளியீடு:-

தாயுமானவர் வகுப்பு அன்பர்கள்

தியாசாபிகல் சொசைடி, சேலம்-1.

வாயுவின் கூறு 5
ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்
இவை 5ம் வாயுவின் கூறுகளாம்

முதற்பதிப்பு 1938.

இரண்டாம் பதிப்பு 1995.

அன்பளிப்பு உரு. 3.

அச்சிட்டோர் : குயில்பண்ணை, சேலம்-1. பேசி : 64294.

நூன் முகம்

பூந்திரை கருட்டும் புணரி சூழ்ந்த, இப்புவியின்கண்; மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும், முன்னோர்களால் நூற் பயன் இதுவென வகுக்கப்பட்ட 'அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினுள் ஈற்றதாய வீடுபேறடைதலே முக்கியமாம்.

அத்தகைய நிலையுடை விழுச்செல்வமாகிய வீடுபேறடை தற்கு முதற் சாதனமாயது தத்துவ ஆராய்ச்சியே யாம். என்னை யோவெனில்? தத்துவ ஆராய்ச்சி இல்வழி தன்னைத் தான் அறிதற்கில்லை யென்பதும், அஃதில்வழி வீடுபேறில்லை யென் பதும் தேற்றம். ஆகவே வீடுபேறடைதற்குத் தன்னைத்தான் அறியவேண்டுமென்பதும், அதற்குச்செய்யும் அப்பியாசத்தில் முதலாயது, தத்துவ ஆராய்ச்சியே என்பதும், யாவருமொப்ப முடிந்த முடிபொருளாம். எனவே, ஒவ்வொருவரும் தத்துவ ஆராய்ச்சி முக்கியமாகச் செய்யவேண்டுமென்பது இதனால் பெறப்பட்டது.

இனி விழுப்பந்தரு நூற்களில் கண்ட தொண்ணூற்றாறு தத்துவங்களையும், கல்வித்துறையிற் கைபோய அறிஞருங்கூட் முறைப்படுத்திச் சரிவர மொழிவாரை யாண்டுங்கண்டிலேம். காரணமென்னையோ வெனில் வசன நடையிலுள்ள தொண் ணூற்றாறு தத்துவங்களையும் தனித்தனிப் பயின்று முறைப் படுத்திச் சாற்ற லரிதாகலின்.

ஆகவே இனி அத்தகைய சிரமமின்றி கற்றோரேயன்றி நனிகல்லாத மக்களும் தத்துவங்களைக் "கைத்தல நெல்லிக்கனி போல" எளிதிலுணர்ந்து பயன்பெறும்பொருட்டு இன்னோசை யுடைய "சூத்திரப் (செய்யுட்) பாவினால்" இந்தத் தத்துவ மாலையை இயற்றலாயினேம். இந்நூல் தத்துவமாலையெனப் பெயராமா றென்னையோ வெனில் பல பூக்களால் தொடுக்கப் பட்ட மாலைக்குப் பூமாலையெனவும்; பல பாக்களால் செய்யப் பட்ட நூற்குப் பாமாலையெனவும்; பெயரிட்டாங்கு, பல தத்து

வங்களாலாய இந்நூற்குத் தத்துவமாலை யெனப் பெயரிட்டாம் இந்நூலில் தத்துவங்களென்னும், பொருட்களைச் சூத்திரங்களென்னும் கயிற்றினால் பகுதி பகுதியாக முறையிற் பிணிக்கப் பட்டிருக்கின்றன.

தன்கட் 'பூதங்கள்' முதலாய ஒவ்வொரு பகுதிகட்கும் இத்தனை தத்துவங்களுளவென்பதை ஒவ்வொரு சூத்திரத்தில் சொல்லி அத்துடன் கணக்குகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும், இத்தனை தத்துவங்கள் சேர்ந்தவைக்கு இன்ன பெயரென்பதும், அதற்குப் புனைபெயர்கள் இன்னின்ன வென்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. இம்முறையை நூலில் கண்டு தெளிக.

இதில் 'வேதாந்தக் கலைப் பயிற்சிக்குத் தேவையான முக்கிய தத்துவங்களைத் தமிழில்மொழி பெயர்க்கவும்பட்டிருக்கின்றன. எனவே, இம்மாலை, தத்துவ ஆராய்ச்சி செய்யும் பேரறிஞர்கட்குப் பேருதவி புரியுமென்பது திண்ணம்.

ஆகவே இந்நூலைப் (பெரியோர் முதல் சிறியோர் வரை ஆண் பெண் அடங்கலுமாக) ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுமெனத் தாழ்மையுடன் வேண்டுகின்றேம்.

இந்நூல் "சிவப்பிரகாசக் கட்டளை" யைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

அரிவரியும் சரிவரக்கல்லா, அறிவிற் சிறியேமாகிய அடியேம் ஆசைப் பெருக்கால் அறைந்த இத்தத்துவ மாலையைக் கண்ணுறும் பெரியோர்கள் இதன்கட் குற்றங்கண்டுழி அறிவிப்பின் திருத்தியமைக்கத் தயாராக இருக்கின்றேம்.

இதனுள் வழுக்களிருப்பினும் இது விழுமியதென தண்டமிழ்வையம் தழுவுமென நம்புகின்றேம்.

இங்ஙனம்.

நூலாசிரியர்.

நூலாசிரியர் வரலாறு



இந்நூலாசிரியர் திருக்குறள் திருமிகு. சி. இராமசாமி தமிழாசான் அவர்கள் சேலம் வட்டம் கொண்டலாம்பட்டியில் 15-8-1918 ஆம் நாள் திரு. சித்தா செட்டியாருக்கும் திருமதி இலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரின் உடன்பிறந்தவர்கள் 3 ஆண்கள், 2 பெண்கள். காரைக்குடி கோயிலூர் மடத்தில் அத்வைதமும் தாய்மாமன் பண்டித திரு. S. சோமநாதரிடம் சைவ சித்தாந்தம் முழுவதும் பயின்றார் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பால பண்டித வித்துவானாகக் கற்றுத் தேர்ந்தார்.

குகை இராமலிங்க சௌடேசுவரி தர்ம மடாலய சமரச சன்மார்க்க சபையில் 25 ஆண்டுகள் திருக்குறள் கழகத்திற்கு ஆசிரியராக இருந்து திருக்குறளைப் பற்றி விரிவுரை ஆற்றினார். 1963 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய 14 ஆண்டுகள் குகை மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி ஆற்றினார்.

இவர் கஜ்ஜல் நாய்க்கன் பட்டியில் காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் தலைமையில் ஏற்பட்ட இந்து சமயக் கல்லூரியில் 8 ஆண்டுகள் முதல்வராகப் பணி புரிந்தார். இவர் எழுதிய "திருமகள் திருவந்தாதி" என்ற நூல் இந்து சமயக் கல்லூரியில் 23 5-1979 ஆம் நாள் வெளியிடப்பட்டது.

இவர் 1972 ஆம் ஆண்டு முதல் சேலம் தியாசாபிகல் சொசைடியில் தர்மப்பிரபு திரு. சஞ்சீவி செட்டியார் அவர்கள் தலைமையில் தாயுமானவர் வகுப்புத் தொடங்கி இன்று வரை தாயுமானவர் பாடலுக்கு விளக்கவுரை ஆற்றி வருகிறார்.

தமிழகம் முழுவதும் சுமார் 55 ஆண்டு காலமாகப் பட்டிமன்றம், தனிச் சொற்பொழிவு, வழக்காடு மன்றம் ஆகியவற்றில் பங்கு கொண்டு தமிழ்த் தொண்டாற்றி வந்துள்ளார். குகை கொடை வள்ளல் திருமிகு. O.S. சுப்பிர மணியச் செட்டியார் அவர்களின் நல் ஆதரவுடன் நலமுடன் வாழ்ந்து வருகிறார்.

தொகுத்தவர் :

புலவர் ஏப. கோவிந்தராசுலு எம்.ஏ., பி.எட்.,
சேலம்-9.

உ

சாற்றுக்கவி

அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை!
வடலூர் இராமானந்த சுவாமிகளால் இயற்றப்பட்டது.

ஆசிரியப்பா

தண்டமி ழறிஞ ராய்ந்த தத்துவங்கள்
தொண்ணூற் றாறுந் தோமற வாய்ந்து
தத்துவப் பயிற்சியிற் றலைப்படு மாணவர்
மெத்தவு மகிழ்ந்து விருப்புடன் பயின்றிடத்
''தத்துவ மாலை'' யாந் தகுபெய ரமைத்து
சூத்திர வடிவிற் றுன்னுறச் செறித்தே
யாத்துத் தந்தன னெழில்மா ளிகைநிறை
சேலமா நகரைச் சேர்ந்திடு குகையைச்
சாலவு மடுத்துத் தகுநலங் கொண்ட
கொண்டல்மா நகரெனுங் குலவிய பதியினன்
தண்டமிழ்ப் பயிற்சியிற் றகுவிருப் புடையோன்
சாந்தம் பொறுமை தயைகொடை முதலா
ஏய்ந்தநற் குணங்க ளியைந்திடு மாண்பினன்
பெரும்பே றெனும்வீ டடையப் பெட்புறும்
''இராம சாமி'' யென் றாம்பெய ரோனே.

சாற்றுக்கவி

K. S. அரங்கசாமி அவர்களால்
இயற்றப்பட்டது.

ஆசிரியம்

திருமருவு பேரின்ப மேதேடு வோர்க்குரிமை
திகழு "தத்துவமாலை" யை
திரையெறியுங் கடலுலக மினியதெனக் கேட்டுளந்
தித்திக்கவே செப்பினான்.
மருமருவு தாமரை யிர்தனத் திடையழகு
மடவனங் கண்ணோற்பரின்
மருவுதட மலியுநன்ற முருகுகொப் பளிக்குநன்
மணிபொழில்வலங் கொண்டதாய்க்
குருமருவு மணிமாட மாளிகை நிறைந்தத்திற்
குலமகளி ரோடுமுறையே
குலவியமிழ் தினுமினிய தமிழேதங் கட்கினிய
குலதெய்வ மென்று துதியே
தருமருவு வீரர்மலி சேலந்த னக்குயர்வு
தரு "கொண்டல் மாநகரமே"
தருகின் றபுலவர் திருக்குறள் இராமசாமி
தரணி தனில்நனி வாழ்கவே!

ஓம்

சிவமயம்

தத்துவ மாலை

சவுடாம்பிகை துதி

சீர்மலி தேவலன் சிறுமைதீர்த் தருள்செய்
ஏர்மலி சவுடாம் பிகையி னிணைகழல்
நார்மலி மலர்கொடு நாந்துதிப் பாமால். 1

கணேசர் துதி

நம்பிக் கையொடு நாண்மலர் தூவித்
தும்பிக் கையனைத் தொழுதேத் துவமே. 2

முருகன் துதி

தமிழ்தரு முருகன் தாண்மலர் தலைக்கொளின்
இமிழ்திரைப் புவியி லெமக்கரி தெஃதே 3

நாமகள் துதி

வெண்டா மரைமலர் மேவிய நாமகள்
தண்டா மரையடி தலைமிலைச் சூதுமே. 4

நூல்

முத்தமிழ்த் தாயின் மொய்கழ லேத்தித்
தத்துவ மாலை சாற்றுகிற் பாமால். 5

பூதங்களாவன

மண்ணீர் தீவளி வானென வைந்தும்
கண்ணார் பூதமெ னக்கழ றினரே.

உரை:- மண், நீர், தீ, வளி, வான் (தமிழ் மொழி)
பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் (வடமொழி)
இவ்வை ஐந்தும் பூதங்களாம்.

மண்-பூமி, நீர்-தண்ணீர், தீ-நெருப்பு, வளி-காற்று வான்-ஆகாயம், கண்-இடம், ஆர்-நிறைந்த, உலகத்தில் பூதங்களே எவ்விடத்திலும் தானாக நிறைந்திருப்பதால், பூதங்கட்குக் 'கண்ணார்' என அடைமொழி கொடுக்கப்பட்டது. கழறுதல் வற்புறுத்திக்கூறுதல். 'உலகாயதர்' நான்கு பூதங்களேயுண்டு வானென ஒன்றில்லையென மொழிவராகலின், அவர்கள் கோளைமறுத்துப் பூதம் ஐந்தேயென நிலைநாட்டப்பட்டமை தோன்றக் 'கழறினர்' எனக் கூறப்பட்டது.

ஞானேந்திரியங்களாவன.

செறிசெவி, மெய்கண், சேர்நா, மூக்கென
அறிபுறக் கருவிக ளைந்தா கும்மே. 7

உரை:- செவி, மெய், கண், நா, மூக்கு, (தமிழ்)
சுரோத்திரம், துவக்குசட்சு, சிங்நுவை, ஆக்கிராணம்
இவை ஐந்தும் ஞானேந்திரியங்களாம். (வடமொழி)

செவி-காது, மெய்-உடம்பு, நா-நாக்கு, ஞானேந்திரியங்கள். அறிவுக் கருவிகள். ஞானம் - அறிவு, இந்திரியம்-கருவி, செறி, சேர் என்பன இசைக்காகக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள். ஐந்தாகும்மே என்பதில் இசை நோக்கி மகரம் தன்னொற்றிரட்டியது.

தன்மாத்திரைகளாவன

நலன்மிகு, மோசையூ றொளிசுவை நாற்றமாம்
புலன்களைந் தாமெனப் புகன்றனர் புலவர். 8

உரை - ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம். (தமிழ்)
சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம். (வடமொழி)
இவை ஐந்தும் தன்மாத்திரைகளாம்.

ஓசை-ஒலி, ஊறு-உணர்ச்சி, ஒளி-வெளிச்சம், நாற்றம்-வாசனை 'தன்மாத்திரைகள்' எனினும் ஐம்புலன்கள் எனினும் ஒன்றே நலன் மிகும்-நன்மை மிகுந்த, இது ஐம்புலன்கள் சிறப்பை யுணர்த்தும். புலவர், மெய்யறிவுடையோர். மெய்யறிவாவது ''தத்துவஞானம்''

''எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்பதனால், ஈண்டுத் 'தத்துவ ஞானம்' எனப்பொருள் கூறப் பட்டது. இக் குறளுக்குப் 'பரிமேலழகர்' உரைத்த உரை காணத்தக்கது.

இனி வரும் சூத்திரங்களில் காணப்படும் பெயர் கட்கும் இவ்வாறே பொருள் கொள்க. நாற்றமாம், ஐந்தும் புலன்கள் 'ஆம், எனப்புலவர் புகன்றனர் என வரிசைப் படுத்துக. நாற்ற மாம் என்பதில் ஆம், என்பது ஆகிய, என இயையும். புலன்க ளாம் என்பதில் ஆம் என்பது இடைக்குறை. இது 'ஆகும்' என விரியும்.

கன்மேந்திரியங்களாவன

வாய்கை காலொடு மலசல வழியென
ஏய்தொழிற் கருவிக ளைந்தென வியம்புவர் 9

உரை:- வாய், கை, கால், மலவழி, சலவழி (தமிழ்)
வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம். (வடமொழி)
இவை ஐந்தும் கன்மேந்திரியங்களாம்.

கன்மேந்திரியங்கள் – தொழிற் கருவிகள், கன்மம்—தொழில் ஏய்தல் - (இது ஏய் என தல் ஈறு கெட்டுவந்தது) பொருந்துதல், தொழிற் செய்வதற்கென்றே பொருந்தியிருத்தலால் கன்மேந்திரியங்கட்கு 'ஏய்தல்' என அடைமொழி கொடுக்கப்பட்டது சலவழி என்பதிலுள்ள 'வழி' என்பதை முன்னதற்குங் கூட்டி, மல வழி, சலவழி யெனக்கூறுக.

கட்டளையின்கண், கன்மேந்திரியங்களைக் கூறுமிடத்து வாக்குக் கடுத்துப் பாதம், கூறி மற்றைப் பாணி முதலியவைகளைக் கூறியிருப்ப 'ஈண்டு' வாக்குக் கடுத்துப் பாணி, கூறி மற்றைப் பாதம் முதலியவைகளைக் கூறியிருப்பதென்னையோ வெனில், நாநாஜீவவாதக் கட்டளையில் ஆகாயத்தினிடமாக வாக்கு, வசனிக்கு மென்றும்; வாயுவினிடமாகப் 'பாணி' இடுதல் ஏற்றல் செய்யு மென்றும்; அக்கினியினிடமாகப் 'பாதம்' நடக்கு, மென்றும்; முறைப் படுத்திக் கூறியிருப்பதனால் அவ்வாறே ஈண்டுங் கூறப்பட்டன.

குறிப்பு:— இனிவரும் தத்துவங்களின் நாமங்களில் தமிழ் மொழியும் கலந்திருப்பதால் பூதங்கள் போல மொழிபெயர்த்தும் பிரித்தெழுதாது விடுத்தாம். அவற்றை ஆங்காங்குய்த்துணர்க.

அந்தக்கரணங்களாவன

மனம்புத்தி சித்தம் மன்னகங் காரம்
எனவகக் கருவிக ளீரிரண் டென்ப
அந்தக் கரண மெனவறை பெயரும்
இந்தக் கருவிக ளெய்திடு மிதுவரை
ஏன்றதத் துவங்க ளிருபா னான்கும்
ஆன்மதத் துவமென் றறையப் படுமால்
போக்கிய காண்ட மசுத்த தத்துவமென்
றாக்கிய பெயரு மண்டயுமா லிவையே 10

உரை:- மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
இவை நான்கும் அந்தக் கரணங்களாம்.

உள்ளிருந்து தொழிற் செய்பவையாகலின், இவைகள் 'அகக்கருவிகள்' எனப்பட்டன. அகம்-உள், மன்-நிலைப் பெற்ற ஆன்மா வீடெய்தும் வரையும் நிலைப்பெற்றிருப்ப தாகலின், அகங்காரத்திற்கு 'மன்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது ஈரிரண்டு நான்கு, "இந்தக்கருவிகள் அந்தக் கரணமென வறை பெயரும் எய்திடும்" என முறைப் படுத்துக. பெயரும் என்பதிலுள்ள 'உம்' இசை நிறை. என்ற-பொருந்திய. இது கீழ்க் கண்ட தத்துவத்தொகுதியின் முதலிறுதி பொருந்துதலைக் குறிக்கும். இருபான் நான்கு-இருபத்து நான்கு எனவே பூதங்கள் முதல் இதுவரையுங் கூறப்பட்ட தத்துவத் தொகுதி 'ஆன்ம தத்துவங்கள்' என்று கூறப்படும். இவை கட்கு அசுத்த 'தத்துவம்' எனவும் 'போக்கிய காண்டம்' எனவும் புனைபெயர்கள் உண்டு. இவைகள் இசை நோக்கிச் சூத்திரத்தில் மாற்றி மொழியப்பட்டன.

ஆகிய என்பது எதுகை நோக்கி ஆ'க்'கிய எனக் ககர மெய்மிக்கது. ஆல்கள் இரண்டும் அசைநிலை. கட்டளையில் 'அகங்காரம்' சித்தத்திற்கு முற்பட மொழிந்திருப்பினும் நாநா ஜீவ வாதக் கட்டளையில் பூதத்தினீற்றதாய பிருதுவியின் அம்சமாக அகங்காரத்தைக் கூறியிருத்தலின் அக்கருத்தேபற்றி ஈண்டிவ்வாறு கூறப்பட்டது.

வித்யா தத்துவங்களாவன.

காலம் நியதி கலையே வித்தை,
இராகம் புருட்னியன்றிடு மாயை
என்றிவை யேழ் மெழில்தரு வித்யா
தத்துவ மென்று சாற்றினர் மேலோர்
அன்றியு மிவைகட் கழுக்கறுஞ் சுத்தா
சுத்த தத்துவ மெனவுந் தோமில்
போக சயித்துரு காண்ட மெனவும்
ஆகும் பெயரெனப் புலவோ ரறைவர். 11

உரை:- காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை இவை ஏழும் வித்யாதத்துவங்களாம்.

இவைகட்கு, 'சுத்தா சுத்த தத்துவம்' எனவும் போக சயித்துரு காண்டம்' எனவும் பெயருண்டு.

மாயையே பலவகைப் பொருள்களாக வடிவங்கொண்டு தோன் றலின், 'இயன்றிடு' மாயை எனப்பட்டது. இயன்றிடல், உண்டா -தல், ஒருவற்குச் சிறந்த உள்ளழகினைத்தருவது 'வித்தை'யே யாதலின் எழில் தருமென்னும் அடைமொழி கொடுத்துக் கூறப்பட்டது.

''குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.,,

என்னும் செய்யுள் பொருளும் ஈண்டுக்காணத்தக்கது. அழுக் கறும்-குற்றமற்ற இது சுத்தமென்பதற்கடைமொழி. தோம்-குற்றம் ஆகும் பெயர் என்பதைப் பெயராகும் என வரிசைப் படுத்துக.

குறிப்பு:- சில சூத்திரங்கீளில் இசைக்கேற்பச் சில சொற்கள் விசேடப் பொருளின்றியுங் கூறப்பட்டன.

சிவதத்துவங்களாவன

சுத்த வித்தையே சுகுணவீச் சுரமே
சத்தியே சிவமே சாதாக் கியமென்
றைந்துஞ் சிவதத் துவங்க ளாமே
அன்றியு மிவைகட் கணிகெழு சுத்த
தத்துவ மெனவுஞ் சாற்றருந் தூய
பிரேர காண்ட மெனவும் பெயரே
ஆகமற் றாறா றரியதத் துவங்கள்
அகநிலைக் கருவியென் றறையப் படுமே. 12

உரை:- சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் இவை ஐந்தும் சிவதத்துவங்களாம்.

இவைகட்குச், 'சுத்த தத்துவம்' எனவும் 'பிரேரகாண்டம்' எனவும் பெயருண்டு. சுகுணம் - நன்மை, அணிகெழு - அழகு பொருந்திய, சாற்றரும் - சொல்லுதற்கரிய, தூய-சுத்தமான, ஆக, என்னுஞ் சொல் தொகையின் முதலிறுதியைக் குறிக்கும் இனி வருபவைகட்கும், இம்மாதிரியே பொருள் கொள்க. மற்று-அசைநிலை, ஆறாறு-முப்பத்தாறு, அரிய-அருமையான, சிறந்த அகநிலைக் கருவி-உள் நிலைக்கருவி, எனவே பூதங்கள் முதல் இதுவரைக்கும் சொல்லப்பட்ட தத்துவத் தொகையை "அகநிலைக்கருவிகள்" என்று சொல்லப்படும்.

குறிப்பு:- இது முதலாக வருஞ் சில சூத்திரங்களில் இசைக்குப் பொருந்துமாறு தத்துவங்களை மாற்றி மொழிந் திருப்பினும் உரை முறைப்படியே கொள்க.

பிருதுவியின் கூறு

தோற்றசை யென்பு தொடர்ந்திடு நரம்பே
மயிருட னைந்தும் மட்பகுப் பாமே. 13

உரை:- மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை இவை ஐந்தும் பிருதுவியின் கூறுகளாம்.

தசை-சதை, பகுப்பு-பிரிவு, உடம் பெங்கும் பின்னி யிணைந்து கிடத்தலின் 'நரம்பு'க்குத் தொடர்ந்திடும் என்னும் அடைகொடுக்கப் பட்டது. மட்பகுப்பு-திரிதல் விகாரம், இது மண்பகுப்பு எனமருவும். தோற்றசை-தோல் தசையெனப்பிரிக்க.

அப்புவின் கூறு

குருதிவிந் தோடுநீர் கூறுவெண் மூளை
நிணமென வைந்தும் நீர்ப்பகுப் பாமே. 14

உரை:- ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை இவை ஐந்தும் அப்புவின் கூறுகளாம்.

குருதி-இரத்தம், உதிரம், இரத்தம், குருதி, என்பன ஒரு பொருட் சொற்கள். விந்து-இந்திரியம், சிறந்த மூளையுடையோரைப் 'பெரியோர்' புகழ்ந்துக் கூறுவராகலின் 'கூறு' எனவும் வெண்மையாகலின் வெண் எனவும் மூளைக்கு அடைமொழிகள் கொடுக்கப்பட்டன. நிணம் - கொழுப்பு, சுக்கிலம் - இந்திரியம், மச்சை-கொழுப்பு.

தேயுவின் கூறு

புணர்த லுண்ணல் புரைமடி துஞ்சல்
அச்சமென் றைந்து மழற்பகுப் பாமே 15

உரை:- ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் இவை ஐந்தும் தேயுவின் கூறுகளாம்.

புரை-குற்றம், மடி-சோம்பல், உலகில் சோம்பலை விடக் குற்றம் பிரி தொன்றின்மையால் மடிக்குப் 'புரை'யை அடையாகக் கொடுக்கப்பட்டது. துஞ்சல்-தூங்குதல், அச்சம், பயம் அழல்-அக்கினி, அழற்பகுப்பு-திரிதல், விகாரம். இது அழல் பகுப்பெனப் பொருந்தும். மைதுனம்-புணர்ச்சி,

வாயுவின் கூறு

ஓடல் நடத்தல் நிற்றலி ருத்தல்
கிடத்தலென் றைந்துங் கிளர்வளிப் பகுப்பே 16

உரை:- ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல். இவை ஐந்தும் வாயுவின் கூறுகளாம்.

கிடத்தல்-படுத்தல், கிளர்வளி-எழுந்து வீசுகின்ற காற்று.

ஆகாயத்தின் கூறு

அவாச்சின பிடிபா டகந்தை பொறாமை
தவாதவம் பரத்தின் தகுபகுப் பைந்தே
ஆகவை யைந்தா மரியதத் துவங்கள்
பூதகா ரியமெனப் புகன்றனர் புலவர். 17

உரை - காமம், குரோதம், உலோபம், மதம், மாச்சர்யம் இவை ஐந்தும் ஆகாயத்தின் கூறுகளாம்.

அவா-ஆசை, சினம்-கோபம், அகந்தை-கர்வம், தவாத-கெடாத, அம்பரம்-ஆகாயம் எஞ்ஞான்றும், தான் கெடா திருப்பதாகலின் 'தவாதவம்பரம்' எனப்பட்டது. ஐயைந்து இருபத்தைந்து, எனவே பிருதுவியின்கூறு முதல் இதுவரைக்கும் சொல்லப்பட்ட தத்துவக் கூட்டத்தைப் "பூதகாரியத் தத்துவங் கள்" என்று சொல்லப்படும். காமம்-ஆசை, குரோதம்-கோபம்-உலோபம் - பிடிபாடு, மதம்-கர்வம், மாச்சர்யம்-பொறாமை, மாச்சர்யத்திற்கு 'உட்பகை' யென்ன உரையொன்றிருப்ப அதை மறுத்தமை என்னையோ? வெனில், இந்தத் தத்துவங்கள் மனத் திலுண்டாம் ஒவ்வொரு வகையான நினைப்பின் பெயரென் பதாம். அந்நினைப்பினால் உளதாகும் காரியங்கள் யாவத் தைத் தந்து பிறவிச்சாகரத்தில் அழுத்துந்தன்மையுடையதால் இந்தத் தத்துவங்களை 'துர்க்குணங்கள்' என்று கூறப்படும்.

இவற்றுள் ஆசையே முதன்மையாம். அவ்வாசையும் இரு வகைத்தென்ப. அவற்றுள் இயல்பாக உண்டாகிற ஆசை ஒன்று பொறாமையால் உண்டாகிற ஆசை ஒன்று. இவற்றுள் முன் னது தான் கோரிய பொருள் கிடைக்காவிடில் வருத்தத்தோ டொழிவதாம். பின்னது தான் கோரிய பொருள் கிடைக்கா விடில் அதன்காரணமாகக் கோபமும் அது கிடைக்கும் வரைக் கும் பிடிபாடு (விடாமையும்) அது கிடைத்தால் அதன் காரண மாக உலகில் எம்போல்வார் எவருமிலரெனக் 'கர்வமும் கொள் வதாம். ஆகவே தீமை பயக்கும்படியான துர்க்குணங்களில் தலை மை பெற்ற ஆசைகளிலும் தீய குணங்களைக் கிளப்புவதற்கு

பொறாமையால் உண்டாகிற 'ஆசை' ஒன்றே முதன்மையென் டதும் அவ்வாசைக்கும், பொறாமையே 'வித்து' என்பதும் அறியக்கிடத்தலின், பொறாமை, என உரை கூறினாம்.

இது பற்றியே தமிழுக்குத் தனி வேதமும் புவியிற்குப் பொது வேதமுமாய் அறிவுக் கதிர் பரப்பி அருணனைப் போன்று உலகில் திகழும்படியான ''திருக்குறளும்''

''அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்.''

அழுக்காறு-பொறாமை என, அறன் வலியுறுத்த நீக்கப் படுபொருள் கூறுமிடத்துப் 'பொறாமை'யை முதற் கண் வைத்ததும் ஈண்டறியத் தக்கது. இதற்கு உரையாசிரியர் உரைத்த உரையை உய்த்துணர்க.

ஆகவே, துர்க்குணப் பகுதியைக் கூறுமிடத்து அவை கட்கு முதன்மையும் ஆதாரமுமாகிய 'பொறாமை'யைக் கூறாது மற்ற தத்துவங்கள் போல மனத்தின் கண் தோன்றியும் வெளிப் படாததும்; சினத் (குரோதத்) தினுள் அடங்குவதுமாகிய 'உட்பகை'யைக் கூறின் அவ்வுரை வழுவாமெனல் அறிக.

தச வாயுக்களாவன

வியானன் பிராணன் விளங்குமபானன்
சமான னுதானன் சார்ந்திடு நாகன்
கூர்மன் கிரிகரன் கூறிடுந் தேவ
தத்தன் தனஞ்சய னெனவீ ரைந்தும்
வளியென நூலில் வழங்கினர் மேலோர். 18

உரை - வியானன் பிராணன், அபானன், சமானன், உதானன் நாகன், கூர்மன், கிரிகரன்; தேவதத்தன், தனஞ்சயன் இவை பத்தும் தசவாயுக்களாம்.

தசம்-பத்து. வளி-காற்று. அக்கினியின் அம்சமான படியால் அபானனை 'விளங்கும்' அபானன் எனவும் வாந்தி பண்ணல் முதலிய துன்பத்தைச் சாரச் செய்பவன் நாகன் ஆகையால் 'சார்ந்திடு' நாகன் எனவும் கொட்டாவி முதலிய துன்பத்தைத் தருபவனென்று கூறப்படுகின்றவன் ஆகையால் தேவதத்தனைக் 'கூறு' தேவதத்தன் எனவும், முறையே அடை மொழிகள் கொடுக்கப்பட்டன.

கட்டளையின் கண், வாயுக்களைக் கூறுமிடத்துப் பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், என முதலைந்தினையும் வைத்து மொழிந்திருப்பினும், நாநாஜீவ வாதக் கட்டளையில் 'வியானன்' ஆகாயத்தின் அம்சமென்றும் 'பிராணன்' வாயுவின் அம்சமென்றும் 'அபானன்' அக்கினியின் அம்சமென்றும் 'சமானன்' அப்புவின் அம்ச மென்றும் 'உதானன்' பிருதுவியின் அம்சமென்றும் முறைப்படுத்திக் கூறியிருத்தலின், அவ்வாறே ஈண்டுங் கூறப்பட்டன.

தச நாடிகளாவன

இடைகலை பிங்கலை யினியதோர் சுழி முனை
சிகுவை புருடன் சீர்காந் தாரி
அத்தி யலம்புடை யழகுசங் கினியே
குகு வெனப் பத்துங் குற்றமில் நூலில்
நாடிக ளென்று நவின்றனர் மேலோர். 19

உரை:- இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி சிகுவை, அலம்புடை, புருஷன், குகு, சங்கினி இவை பத்தும் தசநாடிகளாம்.

தசம்-பத்து, நாடி-நரம்பு, இனியதோர், சீர், அழகு, முதலியவை சிறப்பிடைச் சொற்கள் சிறப்பிடைச் சொல், தன்னியல்பு கெடாமையை யுணர்த்தும் ஒரு வகைச் சொல். இனியதோர் என்பது சந்தவின்பப் பொருட்டு இனியதோர் எனக் குறுக்கல் விகாரம் பெற்றது. பொய்யை மெய்யாகவும், துன்பத்தை இன்பமாகவும் கொண்டு துக்கிக்கும் அறிவின்மையைப் போக்கி நல்ல

அறிவை யுண்டாக்கி நிலையான இன்பத்தை யுண்ணச் செய்வதால் "வேதாந்த நூல்" குற்றமில் நூலெனக் கூறப்பட்டது.

வசனாதிகளாவன

நவிலல் கொடுத்தல் நடத்தல் கழித்தல்
இன்புற லிவையைந் தியல்புறக் கருவியின்
தொழிலென வல்லோர் சொற்றன ரிவைதாம்
எழில்வச னாதியென் றியம்பவும் படுமே 20

உரை:- வசனம், தானம், கமனம், விசர்க்கம், ஆனந்தம் இவை ஐந்தும் வசனாதிகளாம்

நவிலல்-கூறுதல், இன்புறல்-இன்பம் அடைதல், இயல்-அழகு, புறக்கருவிகள் இல்லாவிடில் யாக்கைக்கு அழகின்மையால் புறக்கருவிகட்கு 'இயல்' என அடை கொடுக்கப்பட்டது. புறக் கருவிகள்-கன்மேந்திரியங்கள். தாம்-அசைநிலை, எழில்-அழகு. இது அதன் சிறப்பை யுணர்த்தும். இயம்பவும் என்பதில் 'உம்' இசை நிறை. வசனம்-பேசுதல், தானம்-கொடுத்தல், கமனம்-நடத்தல், விசர்க்கம்-கழித்தல், ஆனந்தம்-இன்புறல்,

கட்டளையின் கண், வசனாதிகளைக் கூறுமிடத்து வசனத் திற்கடுத்துக் கமனம் கூறி, மற்றைத் தான முதலியவைகளைக் கூறியிருப்ப ஈண்டு வசனத்திற்கடுத்துத் தானம் கூறி, மற்றைக் கமனம் முதலியவைகளைக் கூறியிருப்பதென்னையோ? வெனில் வசனாதிகள் கன்மேந்திரியங்களின் தொழிலாதலால் அவற்றிற் கேற்ப வரிசைப் படுத்திக் கூறப்பட்டன.

வாக்குகளாவன

சூக்குமை மத்திமை துகளில்பை சந்தி
வைகரி யெனநால் வகைத்தரோ வாக்கே. 21

உரை:- சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. இவை நான்கும் வாக்குகளாம்.

துகளில்-குற்றமில்லாத. இது அதன் சிறப்பைக் குறிக்கும் இதில் வைகரி யென வாக்கு நால் வகைத்தென்றியம்புக. அரோ-அசைநிலை.

முக்குணங்களாவன

சத்துவ மிரசசு தமமிவை மூன்றும்
முத்தொழிற் குணங்க ளெனமொழி குவரால் 22

உரை:- சத்துவம், இரசசு, தமசு
இவை மூன்றும் முக்குணங்களாம்.

முத்தொழில்-மூவகைத்தொழில். அவையாவன,

சத்துவத்தின் தொழில் -அருள், ஐம்பொறியடக்கம், ஞானம் தவம், பொறை, மேன்மை, மோனம், வாய்மை, யென எண் வகையாம். இராசதத்தின் தொழில்:-ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தவம், தானம், கல்வி, கேள்வி, யென எண்வகையாம். தாமதத்தின் தொழில்: ஒழுக்கமின்மை, காமம், கோபம், கொலை, சோம்பல், நீதிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய் மறதி, வஞ்சகம், எனப் பதினொருவகையாம். (இது திருவால வாய்க் கட்டளையின்படி) ஆல்-அசைநிலை.

அகங்காரங்களாவன

தைசத வைகரி தகைபூ தாதி
என்றிசைப் பனமூன் றகங்கா ரம்மே
அறுபதா மிதுகா றறைந்தத் துவங்கள்
புறநிலை யென்று புகலப் படுமே. 23

உரை:- தைசதவகங்காரம், வைகரியகங்காரம், பூதாதியகங்காரம்
இவை மூன்றும் அகங்காரங்களாம்.

'இதுகாறும் அறைந்த தத்துவங்கள் அறுபதும் புறநிலை யென்று, புகலப்படுமே.'' என்றியைக்க. காறு-வரை. அறுபதாம் என்

பதில் 'ஆம்' அசைநிலை. எனவே, பிருதுவியின் கூறுமுதல் இதுவரையும் சொல்லப்பட்ட தத்துவக்குழுவைப், 'புறநிலைக் கருவிகள்' என்று சொல்லப்படும்.

நூற் பயன்

ஆக மும்மூன் றுப்பத் தாறு
தத்துவங் களையுந் தகுமுறையாக
வைத்தவித் தத்துவ மாலை தன்னைக்
காத லுந்தக் கடிதி னோதி
மாத லம்பெற் றினிது மகிழ்வோர்
இம்மை மறுமை யிருபய னன்றி
மும்மைய தென்று மொழிகுவ தாய
அம்ம விடுதலை யடைகுவர் தாமே. 24

(உரை): மும்மூன்று, பத்து, ஆறு, –(3×3=9×10=90+6=96) தொண்ணூற்றாறு. இக்கணக்கை மேற்கண்ட தத்துவங்களின் தொகையைக்கொண்டு கண்டுபிடித்தாங்கு ஏனையவைகளையும் கண்டு கொள்க. தகுமுறையாக வைத்த-சிறந்த முறையாகக் கோவைசெய்த, காதல்-ஆசை, உந்த-தள்ள, கடிது-விரைவு மா-பெருமை பொருந்திய, தலம்-கைத்தலம், இனிது: இது மகிழ்ச்சியின் மிகுதியை யுணர்த்துவதாம். இம்மை-மண்ணுலகம் மறுமை-விண்ணுலகம். பயன்-நன்மை, மும்மை-வீட்டுலகம், மும்மையது என்பதிலுள்ள 'அது' என்னும் சுட்டு அதன் பயனைக் குறிக்கும். அம்ம! வியப்பிடைச்சொல். வியப்பு-ஆச்சரியம், ''திரிவிதவுலகத்தரி தொரு ஞானி''யாகலின் வியப்பிடைகொடுக்கப்பட்டது. விடுதலை அடைதல்-அவா என்னும் (பாச பந்தங்களாகிய) தளையை அறுத்துத்தள்ளி மனம் அசைதலின்றித் தமியனாக நிற்றல். இதுவே வீடுபேறாம். இது நோக்கியே ஔவையாரும் 'விட்டதே பேரின்ப வீடு' என்றார் தாம் அசைநிலை. இந்நூலையடைந்து உண்மையை யறிந்தவர்கள் வீடுபேறடைதல் உறுதியாகலின், ஈற்றில் தேற்றேகாரம் கொடுத்துச் சொல்லப்பட்டது.

— ○ —

கனையும் வாள் நுழைந்து காயம் இழுநி
கிடை இடையே பேச்சுடம் கிணைக்க – கொடையூசல்
நாட்டுப்போர் நகைக்க நடக்கும் நடை வெண்மேனி
விட்டை நீ தா தா விரைந்து.